©
தமிழ்நாடு அரசு
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 4] சென்னை, புதன்கிழமை, ஜனவரி 28, 2026
தை 14, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண். 115, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (K2)த் துறை, 6 அக்டோபர் 2025.]*

1979 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர் (வேலைவாய்ப்பினையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்ட எண் 30/1979) 35–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1983–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) (தமிழ்நாடு) விதிகளில் செய்யக்கருதியுள்ள பின்வரும் வரைவுத்திருத்தம், மேற்சொன்ன சட்டத்தின் மேற்சொன்ன பிரிவின் கீழ் கோரப்பட்டுள்ளவாறாக, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து ஒரு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், பின்வரும் வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்தும் வரப்பெறும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை 600 006–இல் உள்ள தொழிலாளர் ஆணையர் மற்றும் சென்னை 600 032–இல் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வழியாக, அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன விதிகளில்

(1) விதி 51–இன் துணை விதி (1) இல் படிவம் XV இல்" என்ற சொற்றொடர் விட்டுவிடப்பட வேண்டும்:

(2) விதி 52–இன், துணை விதி (2) இல், துணைப் பகுதிகள் (C) மற்றும் (d) விட்டுவிடப்பட வேண்டும்:

(3) விதி 56–இன் துணை விதி (2) இல், வரம்பு நிபந்தனையில் பகுதி (d)–க்குப் பின்னர், பின்வரும் பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்,

அவையாவன:–

"அல்லது (e) 1950–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் 100 ஆம் விதியைச் சேர்ந்த பகுதி (2)–இல் கோரியுள்ளவாறாக, படிவ எண். 22–இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது:

அல்லது

(f) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல், விதிகளின் 242–ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, விவர அட்டவணை XIII இன் கீழுள்ள, படிவ எண். XXV–இல் ஒருங்கிணைந்த கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது:

(4) படிவங்கள் XV, XIX, XX, XXI மற்றும் XXII விட்டுவிடப்பட வேண்டும்:

(5) படிவம் XVI க்குப் பதிலாக, பின்வரும் படிவம் மாற்றியமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

### படிவம்–XVI

[51(1)–ஆம் விதியைக் காண்க]

இடம்பெயர்தல் மற்றும் வெளியூர் பயணப் படிகளுக்கான தாள் மற்றும் திரும்பும் பயணப் படிக்கான பதிவேடு

ஒப்பந்ததாரரின் பெயரும் முகவரியும் :–

முதன்மை வேலையளிப்பவரின் பெயரும் முகவரியும்:–

நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:–

மாதம் மற்றும் ஆண்டு:

| தொடர் எண் | புலம்பெயர்ந்த தொழிலாளரின் பெயர் | தந்தையின் / கணவரின் பெயர் | மாநிலத்தைக் குறிப்பிட்டு நிரந்தர வீட்டு முகவரி | சொந்த மாநிலத்தின் குடியிருப்பு இடம் மற்றும் முகவரி | பிறந்த நாள் | பதவிப்பெயர் | வகைப்பாடு (உயரளவு பயிற்சி பெற்றவர் / பயிற்சி பெற்றவர் / ஓரளவு பயிற்சி பெற்றவர் / பயிற்சி பெறாதவர்) | ஆதார் எண் | ஊதிய வீதம் | வழங்கத்தக்க ஊதியம் | பணியமர்த்தப்பட்ட இடம் | மாநிலத்தைக்குறிப்பிட்டு பணியிடம் மற்றும் முகவரி | சொந்த மாநிலத்தில் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள இரயில் நிலையம் / பேருந்து நிலையம் | பணிபுரியும் இடத்திற்கு அருகிலுள்ள இரயில் நிலையம் / பேருந்து நிலையம் | வசிக்கும் இடத்திலிருந்து பயணம் தொடங்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* | *(10)* | *(11)* | *(12)* | *(13)* | *(14)* | *(15)* | *(16)* |

| | | |
|---|---|---|
| (17) | வேலை செய்யும் இடத்திற்கு வந்து சேருவதற்கு எதிர்பார்க்கப்படும் நாள் மற்றும் நேரம். | |
| (18) | வேலை செய்யும் இடத்திலிருந்து பயணத்தைத் தொடங்கும் நாள் மற்றும் நேரம். | |
| (19) | சொந்த மாநிலத்தின் வசிப்பிடத்தை வந்து சேருவதற்கு எதிர்பார்க்கப்படும் நாள் மற்றும் நேரம். | |
| (20) | சொந்த மாநிலத்தின் வசிப்பிடத்திலிருந்து வேலை செய்யும் இடத்திற்கு அல்லது அங்கிருந்து வசிப்பிடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பயண முறைகளின் விவரங்கள் | |
| (21) | நெடும்பத்தி எண் (20) இல் குறிப்பிடப்பட்டுள்ள பயண முறைகளின்படி, பேருந்துக் கட்டணம் மற்றும்/அல்லது இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம் மற்றும்/அல்லது ஏனைய பயணச் செலவுகளின் தனித்தனியான தொகை | |
| (22) | நெடும் பத்தி எண் (21) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளின் மொத்தம் | |
| (23) | இடம்பெயர்தலுக்கான படித் தொகை | |
| (24) | வெளியூர் செல்லும் பயணத்திற்கான படித் தொகை | |
| (25) | வெளியூர் செல்லும் பயண காலத்திற்கான ஊதியம் | |
| (26) | திரும்பி வரும் பயணத்திற்கான படித் தொகை | |
| (27) | திரும்பி வரும் பயண காலத்திற்கான ஊதியங்கள் | |
| (28) | செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | |
| (29) | தொகை செலுத்தப்பட்ட நாள் | |
| (30) | புலம்பெயர்ந்த தொழிலாளியின் கையொப்பம் மற்றும் கைப்பெருவிரல் ரேகை பதிவு அடையாளம் | |
| (31) | பணிபுரியும் இடத்திற்கு வருகை புரிந்த உள்ளபடியான நாள் மற்றும் நேரம் | |
| (32) | வெளியூர் செல்லும் பயணத்திற்கான நிலுவை ஊதியங்கள் செலுத்தத்தக்கவை ஏதேனுமிருப்பின் | |
| (33) | நெடும்பத்தி (32)– இல் குறிப்பிடப்பட்ட நிலுவை ஊதியங்கள் வழங்கிய நாள் | |
| (34) | புலம்பெயர்ந்த தொழிலாளரின் கையொப்பம் அல்லது கைப்பெருவிரல் ரேகை | |
| (35) | குறிப்புரைகள் | |

நாள்:

ஒப்பந்ததாரர் அல்லது அவரது
அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம்

**(6)** படிவம் XVIII–க்குப் பதிலாக பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட **வேண்டும்.**

அவையாவன

**படிவம்–XVIII**

**[52(2)(a)–ஆம் விதியைக் காண்க]**

**ஊதியப் பதிவேடு**

**ஒப்பந்ததாரரின் பெயரும் முகவரியும் :**

**பணியின் தன்மை மற்றும் பணியிடம்:**

**மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:**

**முதன்மை வேலையளிப்பவரின் பெயரும் முகவரியும்:**

**ஊதியக் காலம்:**

| **தொடர் எண்** | மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளரின் பெயர் | தொழிலாளர்களுக்கான பதிவேட்டில் தொடர் எண் | பதவிப்பெயர்/பணியின் தன்மை | பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட வேலையின் அலகுகள்/பிரிவுகள் | தினசரி ஊதியவீதம்/செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் | அடிப்படை ஊதியங்கள் | அகவிலைப்படி | கூடுதல் நேரம் வேலை செய்த நாள் | கூடுதலாக வேலை செய்த மொத்த நேரம் அல்லது கூலி எனும் நேர்வில் உற்பத்தியின் அளவு | கூடுதல் நேர ஊதியவீதம் | கூடுதல் நேர வருவாய் | கூடுதல் நேர ஊதியம் வழங்கப்பட்ட நாள் | ஏனைய ரொக்க செலுத்துதல்கள் (செலுத்துதல்களின் தன்மை குறிப்பிடப்பட வேண்டும்) | மொத்த ஊதியங்கள் | முன்பணம் வழங்கப்பட்ட நாள் மற்றும் தொகை | முன்பணம் கோரப்பட்டதன் நோக்கம் (நோக்கங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* | *(10)* | *(11)* | *(12)* | *(13)* | *(14)* | *(15)* | *(16)* | *(17)* | *(18)* |

| | | |
|---|---|---|
| *(19)* | பெறப்பட்ட முன்பணத்தை திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைகளின் எண்ணிக்கை | |
| *(20)* | ஒவ்வொரு தவணையும் திருப்பி செலுத்தப்பட்ட நாள் மற்றும் தொகை | முன்பணத்தைத் திரும்பப் பெறும் நாள் |
| *(21)* | கடைசித் தவணை திருப்பிச் செலுத்தப்பட்ட நாள் | |
| *(22)* | சேதம் அல்லது இழப்பின் விவரங்கள் மற்றும் நாள் | |
| *(23)* | சேதம் அல்லது இழப்பீட்டிற்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை | |
| *(24)* | சேதம் அல்லது இழப்புக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு தவணையின் கீழும் கழிக்கப்பட வேண்டிய தொகை | |
| *(25)* | முதல் தவணை | சேதம் அல்லது இழப்பிற்கான தொகை திரும்பப் பெறப்பட்ட நாள் |
| *(26)* | இறுதித் தவணை | |
| *(27)* | அபராதம் விதிக்கப்பட்ட சட்டம் தவறுதலுக்கான நாள் மற்றும் விவரங்கள் | |
| *(28)* | விதிக்கப்பட்ட அபராதத் தொகை | |
| *(29)* | அபராதம் வசூலிக்கப்பட்ட நாள் | |
| *(30)* | அபராதம் | மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இதற்கு ஏதேனும் காரணம் தெரிவித்தனரா? |
| *(31)* | சேதம் அல்லது இழப்பு | |
| *(32)* | அபராதத்திற்கு | தொழிலாளரின் விளக்கம் பெறப்பட்ட போது அங்கு இருந்த நபரின் பெயர் |
| *(33)* | சேதங்கள் அல்லது இழப்பிற்காக | |
| *(34)* | மொத்த பிடித்தங்கள் | |
| *(35)* | செலுத்தப்பட்ட நிகரத் தொகை | |
| *(36)* | மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளரின் கையொப்பம் கை பெருவிரல் ரேகைப் பதிவு | |
| *(37)* | ஒப்பந்ததாரரின் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் சுருக்கொப்பம் | |

*[அரசாணை (ப) எண். 646, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 18 நவம்பர் 2025.]*

**1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 30ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1953ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளில் மேற்கொள்ள கருதப்பட்டுள்ள பின்வரும் வரைவு திருத்தங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 30ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.**

**2. இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் இந்த வரைவு திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை இருபடிகளில் சென்னை – 600 006 –இல் உள்ள தொழிலாளர் ஆணையர் வழியாக அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.**

**வரைவு திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில்

**(1)** விதி 28–B விட்டுவிடப்பட வேண்டும்.

(2 படிவம் XII விட்டுவிடப்பட வேண்டும்.

***கொ. வீர ராகவ ராவ்,***
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.